பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 30 வியாழக்கிழமை (13-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 166

# தேர்தலில் ஐ.தே.கவுக்கு வெற்றிவாய்ப்பு குறைவு

## உட்கட்சிப் பூசலும் சாத்தியம்

கொழும்பு, மே 13

அடுத்த வாரம் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறும் வாய்ப்பு மிகவும் குறைவாகவே உள்ளதாக அவதானிகள் கருதுகின்றனர்.

கொலையுண்ட ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவி ஹேமா அரசியலில் ஈடுபட முடிவு செய்திருப்பதால் உட்கட்சி பூசல் பெருமளவில் சாத்தியம் என்றும சுட்டிக் காட்டப்படுகிறது.

*மாகாண சபைத் தேர்தலில் ஐ. தே. கட்சி தோல்வி கண்டால் அது புதிய ஜனாதிபதியின் நிலையைப் பாதிக்கும் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.*

தேர்தல் களத்துத் தள நிலையை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெற்றி வாய்ப்பு குறைவாகவே உள்ளது என்றும்—

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகியனவே அதிக மாகாணசபைகளை கைப்பற்றிக் கொள்ளும் என்றும்—

அரசியல் அவதானிகளும், ஆய்வாளர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பி.பி.ஸி வானொலியும் தனது ஆய்வுக் கண்ணோட்டத்தில் இதே கருத்தையே தெரிவித்தது.

ஜனாதிபதி பிரேமதாசா

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கனகபுரத்தில் குண்டுவீச்சு! இளம் தாய் பலியானார்

யாழ்ப்பாணம், மே 13

கிளிநொச்சியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் பெண் ஒருவர் பலியானார்.

நேற்று முற்பகல் 9.30 மணியளவில் கிளிநொச்சிப் பகுதியைச் சுற்றி வட்டமிட்ட இரண்டு எப். 7 ரக விமானங்கள் கனகபுரம் பகுதியில் குண்டு வீச்சினை மேற்கொண்டன.

தாழப்பறந்த விமானங்கள் அந்தப் பகுதியில் நான்கு குண்டுகளை வீசின.

கிளிநொச்சி செல்வா நகரைச் சேர்ந்த தங்கராஜா நாகேஸ்வரி (வயது 35) என்ற மூன்று பிள்ளைகளின் தாய் குண்டு வீச்சில் உயிரிழந்தார். கட்டடங்கள் மற்றும் உடமைகளும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-5)

## வவுனியாவில் குண்டு வீச்சில் சிறுவர் பாடசாலை சேதம்

வவுனியா மாவட்டம் மருதோடை என்னுமிடத்தில் நேற்று முன்தினம் காலை 6 30 மணியளவில் புக்காரா விமானம் ஒன்று நடத்திய குண்டு வீச்சினால் சிறுவர் பாடசாலை ஒன்று சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

புக்காரா விமானத்தில் இருந்து றொக்கட் மற்றும் துப்பாக்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## அரசஊழியர், ஓய்வூதியருக்கு ஜூன் முதல் 600 ரூபா படி

கொழும்பு, மே 13

அனைத்து அரசாங்க ஊழியர்களும் ஓய்வூதியம் பெறுவோரும் மாதாந்தம் அறுநூறு ரூபாவை அலவன்ஸாக அடுத்த மாதம் முதல் பெறுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல தற்காலிக, சமயாசமய, நாளாந்த சம்பளம் பெறும் ஊழியர்களுக்கும் பதில் ஊழியர்களுக்கும் இந்த அலவன்ஸ் வழங்கப்படும்.

இது தொடர்பான பணிப்புரை சகல திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் தலைவர்களுக்கும் பொதுநிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளர் எம். எச். ஜுனைத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1989, 1990, 1991, 1992, ஆம் ஆண்டுகளில் அரச ஊழியருக்கான அலவன்ஸ் சம்பந்தமான வெளியிடப்பட்ட பல சுற்றறிக்கைகள் அடுத்த மாதம் முதலாம் திகதியில் இருந்து வாபஸ் பெறப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## மேலும் 800 மாணவருக்கு பல்கலைக்கழக அனுமதி

கொழும்பு, மே 13

1991 ஜி. ஸி. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர்களில் இருந்து மேலும் 800 பேரை பல்கலைக் கழகங்களில் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

பல்கலைக் கழக அனுமதி தொடர்பாக உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து பல்கலைக் கழக அனுமதி முறையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும்—

அதனால் 800 மாணவர்கள் மேலதிகமாக பல்கலைக்கழக அனுமதி பெறுகிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ)

## செஞ். அதிகாரி யாழ். வருவார்

யாழ்ப்பாணம், மே 13

வடக்கிற்கான கப்பல் சேவையில் உள்ள நடைமுறைப் பிரச்சினைகள் குறித்து ஆராய செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் வெளிக்கள இணைப்பதிகாரி திரு. வேர்னாட் கிறிவன் ரெல்லர் எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

கப்பலில் இருந்து பொருள்கள் விரைவாக இறக்குவதில் உள்ள தடைகள் குறித்தும், மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அவர் இங்கு நிற்கும் போது ஆராய்வார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையும் இணைந்து மேற்கொள்ளும் திட்டங்கள் குறித்தும் அவர் ஆராய்வார்.

(உ-3)

## பாடசாலை விடுமுறை

கொழும்பு, மே 13

மாகாணசபைத் தேர்தல்களை முன்னிட்டு — வடக்கு, கிழக்கு தவிர்ந்த — தேர்தல் நடைபெறும் சகல மாகாணங்களிலும் உள்ள பாடசாலைகள் அனைத்தும் தேர்தல் தினமான 17 ஆம் திகதியும் அடுத்த நாளும் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-6)

## படையினர் சூடு!

தென்மராட்சி, மே 13

நேற்று முன்தினம் மாலை 6 30 மணி முதல் இரவு 9 மணி வரை ஆனையிறவு கறுக்காய் வெளி இராணுவ முகாமிலிருந்து தொடர்ச்சியாக கடற்பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது. எனினும் இளாலிக் கடல் [illegible] வரத்து எதுவித தடங்கலு [illegible]

(உ-15-17-117)

## மட்டக்களப்பில் தமிழர்கள் கைது

யாழ்ப்பாணம், மே 13

மட்டக்களப்பு மாவட்டம் பண்டாரியா வெளி என்னுமிடத்தில் வைத்து கடந்த திங்களன்று 6 தமிழர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பண்டாரியாவெளி, மகிழடித்தீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த ஆறு பேரே கைது செய்யப்பட்டனர். அவர்களில் இருவர் ஆசிரியர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ 5)

## பம்பலப்பிட்டியில் கிளைமோர் கண்ணி!

### கடற்கரைப் பாறையில் கிடந்தது

கொழும்பு, மே 13

நான்கு கிலோ கிராம் எடையான கிளைமோர் அமுக்கக் கண்ணிவெடி ஒன்று பம்பலப்பிட்டி ரயில் நிலையம் அருகில் நேற்றுப் பிற்பகல் கண்டு பிடிக்கப்பட்டது.

கடற்கரையில் பாறை ஒன்றின் மீது இக் கண்ணிவெடி கிடப்பதை பொதுமக்களில் ஒருவர் கண்டு பொலீஸாருக்குத் தகவல் கொடுத்ததாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

குண்டுகளை வெடிக்க வைக்கும் இராணுவப் பிரிவு உடனடியாக அந்த இடத்துக்குச் சென்று அதனை செயலிழக்கச் செய்ததாக பொலீஸார் தெரிவித்தனர் என்று இலங்கை வானொலி அறிவித்தது.

(உ-எ)

## ரணிலின் கூட்டத்தில் துப்பாக்கி இளைஞர்!

தங்காலையில் நடைபெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் துப்பாக்கியுடன் நடமாடிய சிங்கள இளைஞர் ஒருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

பிரதம மந்திரி ரணில் விக்கிரம சிங்கா கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த சமயம் அந்த இளைஞர் அங்கு சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடினார் என்றும் —

பொலீஸார் அவரைச் சோதனை செய்தபோது அவரிடம் துப்பாக்கி ஒன்றும் சில தோட்டாக்களும் காணப்பட்டதாகவும் கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது (உ 5)

## சந்திரிகாகுமாரணதுங்காவை கொல்வதற்கு முயற்சியாம்!

கொழும்பு, மே 13

எதிர்க்கட்சிக் கூட்டணியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் மேல் மாகாண சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர் பட்டியலில் முதலாம் இடத்தில் இருப்பவரும்—

எதிர்க்கட்சித் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மகளுமான சந்திரிகா குமாரணதுங்க தம்மைக் கொலை செய்வதற்கு அரசியல் வாதிகள் உட்பட சிலர் முயற்சி எடுத்திருப்பதாக முறைப்பாடு செய்திருக்கிறார்.

இதுபற்றி பொலீஸ் மா அதிபருக்கும், கொழும்பு கறுவாக்காடு பொலீஸாருக்கும் அவர் முறைப்பாடு செய்திருக்கிறார்.

குறித்த அரசியல்வாதி ஒருவர் கம்பஹா மாவட்ட பொலீஸ் அதிகாரிகளிடமி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## 16 வெளிக்காயங்கள், 9 உட்காயங்கள்

## அதிக இரத்தப்பெருக்கினால் லலித் மரணமடைந்தார்

### சட்ட வைத்திய அதிகாரி அறிக்கை

கொழும்பு, மே 13

லலித் அத்துலத் முதலியின் சடலத்தில் 16 வெளிக்காயங்களும், 9 உட்காயங்களும் காணப்பட்டன. இக்காயங்களிலிருந்து இரத்தம் அதிகமாக வெளியேறியமையினாலே யே அவருக்கு மரணம் சம்பவித்தது.

இவ்வாறு லலித் அத்துலத் முதலியின் சடலத்தை பிரேத பரிசோதனை நடத்திய கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி. எல். டி. அல்விஸ் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணைகளின் போது தமது அறிக்கையை அவர் சமர்ப்பித்தார். (உ-6)

## லலித்தைக் கொன்றவர் சயனைட் அருந்தி மரணம்

கொழும்பு, மே 13

லலித் கொலையுண்ட இடத்துக்குச் சற்று தொலைவில் கிருலப்பனை முகலம் வீதியில் சடலமாகக் காணப்பட்ட இளைஞர் தொடர்பாக, பிரேத பரிசோதனை நடத்திய சட்ட வைத்திய அதிகாரி, அவர் சயனைட் அருந்தி மரணமுற்றிருக்கலாம் எனத் தெரிவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணைகளின் போது சாட்சியமளிக்கையில் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி சி.எல்.டி. அல்விஸ் இத்தகவலை வெளியிட்டார்.

''சயனைட் குப்பியின் துண்

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### மில் விற்பனைக்கு

இரண்டு Wilco கிரைண்டர், சோமசிறி, No 7 ஆகியன விற்பனைக்குண்டு. தனித் தனியாகவும் கொடுக்கப்படும். தொடர்பு: யாழ். ரெக்ஸ், பிரசாத் வீதி. (வட்டு. இந்துக் கல்லூரிக்கு அருகில்) வட்டு. கிழக்கு, சித்தன்கேணி. (6172)

### தேவை

மூங்கில் தடி மொத்தமாகவும், சில்லறையாகவும் தேவை. தொடர்பு: அண்ணா தொழிற்சாலை. இணுவில். (சி 4990)

### பெயர் மாற்றம்

யாழ். நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் கணேசலிங்கம் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K. V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (25537)

### தவறிவிட்டது

11-05-93 அன்று பழைய பூங்கா வீதிக்கும், கச்சேரிக்கும் இடையில் திறப்புகள் கோர்வையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து திருமதி பத்மதாசன் சிறாப்பர், கச்சேரி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (25631)

### புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் 16-05-93 ஞாயிறு வெளியிடப்படும். விடை அளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், இல 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (25623)


**கலை, வர்த்தக கல்லூரி**
C .C. A.
வெலிங்டன் சந்திக்கு அருகில்
யாழ்ப்பாணம்.

**புதிய பிரிவு - 95**

ஆரம்பம்:-
15 - 05 - 1993
சனி காலை 8-00 மணி

குறிப்பு:
எமது வழமையான ஆசிரியர் குழு
- நிர்வாகி.
[ -4998]



**பாரதிதாசன்**
கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் படிப்புகள்

**G A. Q**
1994 ஏப்ரல்
**B. A.**
1994 ஏப்ரல்

பொருளியல்
S. வரதராஜன்
B A. (Hon.)

ஆரம்பம்:
16 - 05 - 1993
ஞாயிறு 1-00 p.m.
(சி-4992)



# B. A - 94
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

விரிவுரைகள் ஆரம்பம்: **22-05-1993**
காலை 10 மணி

விவரங்களுக்கு:
எஸ். அருள்நங்கை,
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-4995)


## இதய அஞ்சலி

### அமரர் சி. நாகரெத்தினம்

அமரர் சி. நாகரெத்தினம் அவர்கள் 05 - 05 - 93 அன்று நயினாதீவில் காலமானார். இவர் எமது கல்லூரியின் மாணவ முதல்வன் செல்வன் நா. மோனேஸ்வரனின் தந்தையார் ஆவார். அன்னாருக்கு எமது உள்ளத்தின் ஆழத்தில் இருந்து அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

மாணவ முதல்வர்கள்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(சி-5119)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சி. நாகரெத்தினம்

எமது கல்லூரி உயர்தர மாணவன் செல்வன் நா. மோனேஸ்வரன் அவர்களின் தந்தையார் திரு. சி. நாகரெத்தினம் அவர்கள் 05 05-1993 அன்று காலமாகிவிட்டார். இவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உயர்தர மாணவர் மன்றம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(சி-5120)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி சத்தியபாமா சசிதரன்

உதயம்: 28 — 03 — 1958
அஸ்தமனம்: 13 — 04 — 1993

நிலவொளி வதனமும் நீண்டடர் கூந்தலும்
நின்நாவில் அரும்பும் நல்லினிய மென்மொழியும்
காலனின் நெஞ்சையும் கவர்ந்த ததனால்
குடித்தானோ நின்னுயிரைக் குறையிடை வாழ்வினிலே
கனியிருக்கக் காய்களையும் காலனைக் கடிந்தென்ன
கடவுளைத் தொழுகின்றோம் நின் ஆன்ம சாந்திக்கே!

அன்புக் கணவனும்,
உற்றார், உறவினரும்.

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை.
(25628)

விண்ணக வாழ்வின்

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 24 — 01 — 1924



ஆண்டவன் அடியில்: 14 — 05 — 1988

### அமரர் சவரிமுத்து அம்புறோஸ்

நீங்கள் மறைந்து ஐந்தாண்டென்ன, எத்தனை ஆண்டுகள் வந்தாலும் உங்கள் நினைவுகள், எங்கள் நெஞ்சங்களில் சோகங்களாகவே சுமந்து நிற்போம். இவரின் ஆன்ம சாந்திக்காக 14-05-1993 வெள்ளிக்கிழமை காலை 6-00 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் பங்குபற்றி, இவரின் ஆன்ம சாந்திக்காக செபிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

என்றும் உங்கள் நினைவில் வாடும்;
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

151. 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (25633)

உ

யாழ். அரியாலை நீர்நொச்சித்தாழ்வு
ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தானம்

## இலட்சார்ச்சனைப் பூர்த்தி தினம்

14-05-1993 ஸ்ரீமுருக வருடம் வைகாசி மாதம் 1ஆம் நாள் வெள்ளிக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| காலை | 7-00 | மணிமுதல் | யாகபூசை |
| | 8-30 | ,, | கணபதி ஹோமம் |
| | 11-00 | ,, | 108 கலச சங்காபிஷேகம் |
| | 12-00 | ,, | பூசைகள் |
| மாலை | 6-15 | ,, | இலட்சார்ச்சனை இறுதி நிகழ்வும், பஞ்சமுக விநாயகர் உள்வீதி, வெளிவீதித் திருஉலாவும். |

விநாயகரை வணங்கி விக்கினங்களைத் தீர்க்கும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(25620) - உபயகாரர்கள்.

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

ஆண்டவன் படைப்பு: 09 — 05 — 1970



அநியாய அழிப்பு: 13 — 05 — 1989

### முத்துக்குமாரு கோபாலகிருஸ்ணன்

[யாழ். மத்திய கல்லூரி மாணவன்]

சகோதரா!!!
கடந்து செல்லும் விடுதலை யாத்திரையில்
கைதவறிப் போய்விட்ட அண்ணா!......
ஆர்ப்பரித்து எழுந்த கங்கையே - உன்னை
வெறும் துரும்பு என்று நினைத்து
தூக்கி எறிந்தவர்கள் அந்தத் துரோகிகள்
நீ நிலத்தில் வீழ்ந்த போது - நாம்
வெடித்தது கண்டல்லவா - உன்
விஸ்வரூபத்தை விளங்கிக் கொண்டார்கள்
உண்டு சாவது ஒருவகை
உண்ணாமற் சாவது இன்னொரு வகை - ஆனால்
உன் சாவு ஒரு தனி வகை......

உன் பிரிவால் வாடும்:
769, பாடசாலை பஸ்சேவை-
வேம்படி மகளிர் கல்லூரி, மாணவ, மாணவிகள்.
மத்திய கல்லூரி மாணவர்கள். [25637]

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

மலர்வு: 13 — 04 — 1907



உதிர்வு: 13 — 04 — 1993

புங்குடுதீவு - 10
தெய்வத்தாய் - சிவத்தமிழ் மூதாட்டி

அமரர் திருமதி
### தில்லையம்பலம் அன்னபூரணம்

வையகத்து வாழ்வாங்கு வாழ்ந்து நாளும்
வழிகாட்டி நின்றபெருந் தாயே நாங்கள்
உய்வதற்குக் காரணமாய் நின்றா யம்மா!
உலகினிலே மனிதரென நிலைக்கச் செய்தாய்
செய்வதற்குத் தகுந்த பெருங் கடமை தன்னைச்
சீராகக் காட்டியதோர் தாயே நீங்கள்
தெய்வமதாய் மாறியொரு மாத மாச்சே
திருமகளே! என்றுமெமக் கருள்வாய் நீயே!

பாசமுள்ள
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

43/2, மணற்றரை ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம், (25639)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தரமான பரீட்சை!

வடபகுதி மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கிவிடுமாறு புதிய ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாகப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் ஆலோசனை செய்துவிட்டு நான்கு அல்லது ஐந்து நாட்களில் முடிவு தெரிவிப்பதாக இக்கோரிக்கையை நேரில் விடுத்த தமிழ் எம். பி. திரு. பரராஜசிங்கம் ஜோசப்பிடம் ஜனாதிபதி விஜேதுங்கா உறுதி அளித்துள்ளார்.

திரு விஜேதுங்கா ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கே தாம் முன்னுரிமை வழங்கப்போவதாக நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்திருந்தார். அதற்குச் சகல மக்களினதும் ஒத்துழைப்பையும் கோரி இருந்தார்.

அத்தோடு கொழும்பில் இருந்து வெளியாகும் பத்திரிகைகளுக்கு, ஜனாதிபதி என்ற வகையில் வழங்கிய முதலாவது பேட்டிகளில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதிலேயே தாம் முதலில் கவனம் செலுத்தப்போவதாக வலியுறுத்திக் கூறியுள்ளார்.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஜனாதிபதிக்கு இருக்கும் அக்கறையையும், ஆர்வத்தையும் சோதிக்கும் தரமுள்ள பரீட்சை ஒன்றை திரு. ஜோசப் நடத்தியிருக்கிறார்! உண்மையாகவே திரு. விஜேதுங்காவுக்கு தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறை இருந்தால், அவர் அதற்கான நல்ல சமிக்ஞையைக் காட்ட வேண்டும். தமது உள்ளம் நினைப்பதைச் செயலில் காட்ட வேண்டும். கொலையுண்ட ஜனாதிபதி பிரேமதாசா தமிழர் விவகாரத்தில் வெறும் மேனி மினுக்குப் பேச்சுக்களில் காலத்தைக் கடத்தினாரே அன்றி ஆக்கபூர்வமான, உருப்படியான செயல் எதிலும் இறங்கியதில்லை.

புதிய ஜனாதிபதி அவரைவிட வேறுபட்ட புதுவழியில் செல்வார் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அதற்கு திரு. ஜோசப் நடத்தியிருக்கும் பரீட்சை ஒரு நல்ல மார்க்கம்.

புதிய ஜனாதிபதி தமது நல்லெண்ணத்தைப் புரியவைக்க வேண்டுமானால், வடபகுதித் தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்கும் முடிவை எடுக்கவேண்டும். இது புதிய வழி ஒன்றை, நாட்டின் தலைமைத்துவத்தில் தனக்கென ஒரு தனி வழியைத் தோற்றுவிக்க நல்ல வாய்ப்பும் சந்தர்ப்பமுமாகும்.

தமிழர்களை இராணுவ ரீதியாக மட்டும் பலவீனப்படுத்த முடியாது என்ற அனுபவத்தில் இருந்து எழுந்ததுதான் பொருளாதாரத் தடை. அந்தப் பொருளாதாரத் தடையைப் பூரணமாக்குவதே போக்குவரத்துத் தடை.

எனவே பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கினால், தமிழ் மக்களை கழுத்தில் திருகிப் பிடித்து அழுத்தும் குறட்டைக் கழற்றினால், அது சுமுகமான சூழ்நிலைக்குத் திறவு கோலாக அமையும்

பொருளாதாரத் தடை நீக்கப்படுவதற்குச் சாதகமான முடிவை எடுத்தால், அது அர்த்தமுள்ளதாக, பயன் விளைவிப்பதாக மாறுவதற்கு போக்குவரத்துத் தடையும் நீக்கப்பட்டாக வேண்டும். அதற்கடுத்து இராணுவத் தாக்குதலை — போரை — நிறுத்தலாம்.

பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு வழி செல்வதற்கு இராணுவ வழி மூடப்படவேண்டும். அந்த மூன்றாம் கட்டம் உருவாகுவதற்கு பொருளாதாரத் தடை நீக்கம் நல்ல சகுனமாக, ஆரம்பமாக அமையும். தாம் மென்மைப் போக்குடையவராக இருப்பினும் கடுமையான முடிவைச் சொந்தத்தில் எடுக்கத் தயங்கப்போவதில்லை என்று கூறியிருக்கும் புதிய ஜனாதிபதி, பொருளாதாரத்தடையை நீக்கி அதனைச் செயலில் காட்டட்டுமே! எப்படியோ அவரது சாயம் வெளிறிவிடுமா இல்லையா என்பது ஐந்து நாட்களில் தெரிந்துவிடும்!!

# கொழும்பு விலையில் புதிய சைக்கிள்கள்

## மாநகரசபை ஊழியருக்கு!

யாழ். மாநகரசபை ஊழியர்களில் 48 பேருக்கு புதிய சைக்கிள்கள் கொழும்பு விலைக்குக் கிடைக்கவுள்ளன.

48 சைக்கிள்களை கொண்டுவருவதற்கு கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கிவிட்டதால் அவை விரைவில் யாழ்ப்பாணம் கொண்டுவந்து சேர்க்கப்படும் என்று மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

மாநகரசபை சுகாதாரப் பகுதி வெளிக்கள ஊழியரின் பாவனைக்கென 50 சைக்கிள்களைக் கப்பல் மூலம் கொண்டுவருவதற்கு அனுமதி கோரப்பட்டிருந்தது. ஆனால் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் 48 சைக்கிள்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது!

இதேவேளை மாநகரசபை ஊழியர் ஒவ்வொருவருக்கும் சைக்கிளுக்குரிய ரயர் - ரியூப் ஒவ்வொன்று வழங்கவும் ஏற்பாடாகி உள்ளது

மாநகரசபை ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் புதிய சைக்கிள்களைத் தருவித்துக் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ-162)

# பொதுக் கல்வித் தேர்வில் விஞ்ஞான செயன்முறை

பாடசாலைகளில் மாணவர்களின் செயன்முறை மூலமான விஞ்ஞானப் பாடக்கற்றலை ஊக்குவிக்கும்முகமாகவும் மாணவர்களின் செயன்முறை தொடர்பான திறன்களை மதிப்பீடு செய்வதற்கும் ஏற்ற முறையில் இவ்வருடம் நடைபெறவிருக்கும் தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் ஒரு பகுதியாக விஞ்ஞான பாடத்தில் செயன்முறைத் தேர்வும் நடத்தப்படும்.

கடந்த காலங்களில் யாழ். மாவட்டப் பொதுத் தேர்வின் போது ஆண்டு 7 முதல் 10ஆம் வகுப்பு வரை நடுவருடத் தேர்வின் ஒரு பகுதியாக நடைபெற்றது போன்று நிலையத் தேர்வு முறையில் (Station Techniques) இத்தேர்வு நடத்தப்படும்

தேர்வு நடிகள் ஒவ்வொருவரும், தேர்வு நிலையத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட 10 அமைப்புக்களில் தாங்களாகவே விஞ்ஞானச் செயன்முறைகளில் ஈடுபட்டு வழங்கப்பட்ட வினாக்களுக்கு விடை அளிப்பர்.

விஞ்ஞானச் செயன்முறைத் தேர்விலும் அறிமுறைத் தேர்விலும் பெற்ற புள்ளிகள் ஒன்றாக்கப்பட்டு விஞ்ஞான பாடத்திற்கான இறுதி மதிப்பெண்கள் வழங்கப்படும்.

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வின் எழுத்துத்தேர்வு செப்டம்பர் இறுதி அக்டோபர் முதல் வாரத்தில் நடைபெறும். விஞ்ஞான பாட செயன்முறைத் தேர்வு அக்டோபர் மாதம் மூன்றாம் வாரத்தில் வட தமிழீழம் எங்கும் நடைபெறும் 100 தேர்வு நிலையங்களில் 25 000 பரீட்சார்த்திகளுக்கு இரு தினங்களில் நடத்தி முடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மிட் ரவுண் றோட்டறக்ட் கழகம் "உதயன்" நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டங்கள் இன்றும் நாளையும் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

இன்றைய ஆட்டத்தில் ஷப்றா அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணியும் —

நாளைய ஆட்டத்தில் பற்றிஷியன் (கோல்ட்) அணியை எதிர்த்து ஜொனியன் சிவப்பு) அணி மோதும்.

o o o

யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்று போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ திருமலை நட்சத்திரங்கள் "ஏ" அணி எதிர் மகமாயி "ஏ" அணி.

★ மயிலங்காடு ஞானகலா "ஏ" அணி எதிர் உரும்பராய் உதயசூரியன் "ஏ" அணி.

o o o

"உதயன்" கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ மனேற்காடு சென். அன்ரனீஸ் எதிர் சிவானந்தா 'ஏ'.

★ ஆதிசக்தி 'ஏ'' எதிர் ஞானம்ஸ் வி க.

o o o

அரியாலை சனசமூக நிலையம் நடத்தி வரும் — 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — விலகல் முறை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ மாலை 4 மணி:- யங் றோயல் அணி எதிர பண்டிதர் "ஏ" அணி

★ மாலை 5 மணி:- புங்குடுதீவு "ஏ" அணி எதிர் அளவெட்டி யுத் "பி" அணி

# குமணவிலிருந்து இன்று பொருள்கள் இறக்கப்படும்

கொழும்பிலிருந்து பொருள்களுடன் கடந்த திங்கட்கிழமை புறப்பட்ட "குமண" கப்பல் நேற்று இரவே காங்கேசன்துறை வந்து சேர்ந்துவிடும் என்று நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு தகவல் கிடைத்தது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

"குமண" கப்பல் கொழும்பில் இருந்து நேற்று புறப்படவிருப்பதாக முன்னர் வந்த தகவல்கள் தெரிவித்திருந்தன ஆனால் திங்கட்கிழமையன்றே அது கொழும்பிலிருந்து புறப்பட்டுவிட்டதாக தற்போது தெரியவருகிறது.

"குமண" நேற்றிரவு காங்கேசன்துறையை வந்து சேர்ந்தால், இன்று தொடக்கம் பருத்தித்துறை துறைமுகத்தில் அதிலிருந்து பொருள்கள் இறக்கப்படும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

# ஜனாதிபதி முறையை மாற்ற சிறிமா தேர்தலில் போட்டி

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காகவே நான் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவேன்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா [illegible] வாறு தெரிவித்தார்.

"அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றியீட்டியவுடன், நிறைவேற்று அதிகாரங்கள் அனைத்தையும் நாடாளுமன்றத்துக்குக் கையளிக்க உதவுவேன். அதன்பின்னர் [illegible] ஓய்வுபெறுவேன்" இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-எ)

ராஜீவ் கொலைச் சம்பவம்:

# அதிகாரிகள் மீது நடவடிக்கை மத்திய அரசு கோரிக்கை

ஸ்ரீபெரும்புதூரில் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டது தொடர்பாக, பாதுகாப்புக் குறைபாடுகளுக்குக் காரணமாக இருந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி தமிழக அரசை மத்திய அரசு கேட்டுள்ளது'

ராஜீவ் காந்தி கொலைக்கு தமிழ்நாடு பொலிஸார் போதிய பாதுகாப்பு அளிக்கத் தவறியதே காரணம் என்று வர்மா ஆணைக்குழு குறிப்பிட்டிருப்பதாக உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் லோகசபையில் நேற்றுத் தெரிவித்தார். (உ-எ)

## நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 2-30 மணிக்கு கவிஞர் கரவைக் கிழார் "ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே" எனும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். (க)

# சுதந்திரமான தேர்தலை உறுதிப்படுத்த உத்தரவு

மாகாணசபைத் தேர்தல் சுதந்திரமானதாகவும், நீதியானதாகவும் நடப்பதை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பொலீஸாரைப் பணித்துள்ளார்.

தேர்தல் பணிகளில் ஈடுபடும் அதிகாரிகள் மற்றும் வேட்பாளர்கள் அச்சுறுத்தப்படுதல், தாக்கப்படுதல் முதலிய முறைப்பாடுகள் பொலீஸாருக்கு எதிராக வரக் கூடாது என்றும் —

குற்றமிழைக்கும் பொலீஸாருக்கு சட்டப் படியான தண்டனை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், மே 13

திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவிருக்கும் குறுகிய கால விவசாயப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9-30 மணிக்கு மேற்படி நிலையத்தில் சமுகமளிக்கும்படி வேண்டப்பட்டுள்ளார்கள். (ஈ)

## ஷெல் தாக்குதல் சம்பவங்கள்

நேற்று முன்தினம் இரவு 7 15 மணியளவில் இயக்கச்சி முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் கிளாலி பண்டிதர் குடியிருப்பை அண்டிய பகுதிகளில் விழுந்து வெடித்தன.

o o o

நேற்றுக் காலை 9 30 மணி முதல் காரைநகர் படையினர் பொன்னாலைப் பகுதியை நோக்கி ஐந்துக்கு மேற்பட்ட ஷெல்களை ஏவினர். இவை பொன்னாலை, மூளாய் வயல் வெளிகளில் விழுந்து வெடித்தன.

o o o

வயாவிளான் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் வளலாய், பத்தமேனிப் குதிகளை நோக்கி நேற்றும் நேற்று முன் தினமும் காலையில் ஷெல் தாக்குதல்களை நடத்தினர். துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

நேற்று முன்தினம் காலை பத்தமேனிப் பகுதியில் வீடொன்றில் விழுந்து வெடித்த ஷெல்லினால் திருமதி செ. பூபதியம்மா (வயது 62) என்பவர் படுகாயமடைந்தார். (உ-155)

### தேர்தலில் .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வின் கொலையை அடுத்து ஐ. தே. கட்சிக்கு உறுதியான தலைமைத்துவம் இல்லாமற் போய்விட்டது. அதனால் உட்கட்சிப் பூசல் வளரும் சாத்தியம் அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது

பி. பி ஸி தனது கண்ணோட்டத்தில் பின்வருமாறு தெரிவித்தது:-

எதிர்க்கட்சிகள் வெற்றி அடைந்தால் அது அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் தங்களின் பிரசாரத்தை மேற்கொள்ள வலுவான அடிப்படையாக அமைந்துவிடும்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைச் சந்திக்க நேரிடுமேயானால் புதிய ஜனாதிபதி விஜேதுங்கவின் பதவிக்கே அது ஆட்டங் கொடுக்கும் எனலாம். அப்படி ஏதாவது நடந்துவிட்டால்— ஹேமா பிரேமதாஸாவும் தாம் சொன்னதை செய்து காட்ட முயன்று விட்டால்—

அந்தச் சூழ்நிலையில் இலங்கையின் அரங்கில் அவருக்கு ஓர் இடம் கிடைப்பது என்பது உறுதி — என்று கண்ணோட்டத்தில் கூறப்பட்டது

இதேவேளை

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவியான ஹேமா பிரேமதாஸா அரசியலில் பிரவேசிக்க முயற்சித்திருப்பதை ஐ. தே கவின் முக்கிய தலைவர்கள் விரும்பவில்லை எனக் கூறப்படுகிறது

இதனால் கட்சிக்குள் உட்கட்சிப் பூசல்கள் தலைதூக்கியிருப்பதாகவும் —

இத்தகைய கோஷ்டிப் பிணக்குகள் திங்கட்கிழமை நடக்கவிருக்கும் மாகாண சபைத் தேர்தலின்போது ஐ தே. கவை பெரிதும் பாதிக்கும் என்றும்—

"ராவய" பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் குறிப்பிட்டார். (அ-உ-எ-6

### லலித்தை ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டொன்று காணப்பட்டது. உதடுகளில் காயங்கள் காணப்பட்டன இதனால் சயனைட் அருந்தியே அவர் மரணமுற்றிருக்கலாம் எனத் தெரிகிறது." - இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார்

மேற்படி சடலமாகக் காணப்பட்ட இளைஞர் சாவகச்சேரியைச் சேர்ந்த சந்தையா ரகுநாதன் என்றும்—

அந்த இளைஞரே லலித் அத்துலத் முதலியை சுட்டுக் கொன்றார் என்றும் பொலீஸார் தரப்பில் கூறப்பட்டு வருவது தெரிந்ததே

### சந்திரிக்கா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து இதற்காக ஆயுதங்களைப் பெற்றிருப்பதாகவும் —

தான் பங்குபற்றும் கூட்டங்களுக்கு ஆயுதங்களுடன் ஆட்களை அவர் அனுப்புவதாகவும் சந்திரிகா தமது முறைப்பாட்டில் தெரிவித்திருக்கிறார்

சந்திரிகாவின் கணவரான விஜயகுமாரணதுங்கவும் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது தெரிந்ததே. (உ-6


## தொடர்ந்தும் இயங்குகின்றது

இராஜநாதன் இரவீந்திரவர்மன் அன் கோ

(பட்டயக் கணக்காளர்)

R R VARMAN & Co

(Chartered Accountants)

எமது நிறுவனம் இல. 166, ஆஸ்பத்திரி வீதி எ. எஸ். சங்கரப்பிள்ளை கட்டடத்தில் வழமை போல் தொடர்ந்தும் இயங்குகின்றது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(முன்னைய ஈ வி. தளையசிங்கம் அன் கோ கட்டிட)

சி. குணசிங்கம்
முகாமையாளர்

(25638)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கோண்டாவில், இணுவில், மஞ்சத்தடி
## அருணகிரிநாதர் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
# திருக்கல்யாண விஞ்ஞாபனம்

முருகன் அடியார்களே!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் சித்திரை மாதம் 30ஆம் நாள் இன்று (13-05-1993) வியாழக் கிழமை முற்பகல் 9மணிக்கு முருகப் பெருமானுக்கு விசேட சங்காபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்று பிற்பகல் 4-30மணிக்கு திருக்கல்யாண வைபவம் நடைபெறும்.

### மேளக் கச்சேரிகள்

இ. சண்முகராஜ குழுவினர்
க. உதயநாதன் குழுவினர்
K. R. சுந்தரமூர்த்தி குழுவினர்
V. K. கானமூர்த்தி, V K. பஞ்சமூர்த்தி குழுவினர்
N. K. பத்தமநாதன் குழுவினர்
K. R. புண்ணியமூர்த்தி குழுவினர்
K நித்தியானந்தம் குழுவினர்
V. T. உதயசங்கர் குழுவினர்
N. R. ரவீந்திரன் குழுவினர்
N. R. சுதாகரன் குழுவினர்

### இரு வயலின் இசை

V. R. இராதாகிருஷ்ணன், S. கோபிதாஸ் — வயலின்
K. கண்ணதாசன் — மிருதங்கம்
R. புண்ணியமூர்த்தி — தவில்
P. வீராச்சாமி — கெஞ்சிரா
P. கணேசன் — கெடம்
S. ராயு — முகர்சிங்

முருகன் அடியார்கள் அனைவரும் முருகன் திருக்கல்யாண வைபவத்திற்கு வருகை தந்து முருகன் அருளைப் பெற்று ஏகுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,
முருகன் அடியார்கள்.

[சி-5121]

மூளாய் வதிரன்புலோ
## சித்திவிநாயகர் தேவஸ்தானம்
# அறிவித்தல்

அன்புடையீர்!

மேற்படி தேவஸ்தானத்தில் 1790 ஆம் ஆண்டிலிருந்து அடியார்கள், பொதுமக்கள் ஆகியோர் திருப்பணிகள் செய்தும், பாதுகாத்தும், உபயங்களை சிறப்பாக நடத்தியும் வந்துள்ளனர். இத்தேவஸ்தான வளர்ச்சி கருதி ஐந்து இளைஞர் பொதுமக்களின் ஏகோபித்த அபிப்பிராயம் எடுக்கப்பட்டு கலை, பண்பாட்டுக்கழகம், பின்னர் காவல்துறையின் அனுசரணையுடன் 02-11-1991இல் ஒரு பூரணத்துவம் வாய்ந்த பரிபாலனசபை அமைக்கப்பட்டு, 07-11-1992இல் பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புத்திட்ட விதிகள், ஆலய நடைமுறை ஒழுங்கமைப்பு உபவிதிகளுக்கமைய சகல தேவஸ்தான உள் வெளி விவகார நிர்வாக வேலைத்திட்டங்களையும் அது நிர்வகித்து வருகின்றது.

இதற்கு முரணாக 20-11-1992, தேர்த்திருப்பணிச் சபை புதிய சித்திரத்தேர் சிறப்புமலர் - 1இல். பக்கம் 5இல் அச்சபையின் காரியதரிசியின் அறிக்கையிலும் 04-05-1993 திரு. க. குமாரசாமியினால் வெளியிடப்பட்ட மூளாய் வதிரன்புலோ (மூத்த) சித்திவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா விஞ்ஞாபனத்திலும் கூறப்பட்டதுபோல திரு. கந்தையா குமாரசாமி என்பவர் இத்தேவஸ்தானத்தில் இன்றைவரை எக்காலத்திலும் ஆலய மூகாமையாளராகவோ (மனேஜர்) அல்லது பரம்பரை தர்மகர்த்தாவாகவோ, செயல்படவில்லை என்பதை சகல பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

நன்றி.

''சித்தி விநாயகர் கருணை மகத்தானது''

க. செல்வராசா,
செயலாளர்.

மூளாய்.
10 05-1993.

(சி 5118)

# மரண அறிவித்தல்

திருமதி
## இளையதங்கம் சின்னத்துரை

திருமதி இளையதங்கம் சின்னத்துரை காலமானார்.

இவர் இளைப்பாறிய அதிபர் திரு. வ.தே. சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், திருமதி நேசமணி, திரு தேவகுமாரன் (சுவிஸ்), திருமதி தேவமணி ஆகியோரின் பிரிய தாயாரும், திரு. ஜே எஸ். கிறிஸ்ததாஸ் ஆசிரியர், திருமதி ஆனந்தி, திரு க மனோகர் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடும்ப மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
ஜே.எஸ் கிறிஸ்ததாஸ்
(ஆசிரியர்)

''தங்கமால்''
அல்வாய்.

(25643)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 291 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13 - 05 - 1993 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

## ஆலயங்களில்

பருத்தித்துறை ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்மன் கோவில் தெப்பத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும். (க-30)

o o o

ஏழாலை மேற்கு கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு சங்கிராந்தி அபிஷேகமும் மாலை 5-30 மணிக்குக் கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெறும். (க-45)

## இன்று

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் ஒன்று இன்று நண்பகல் 12 மணிக்கு கைலாசபதி அரங்கில் நடைபெறும். (க-87)

o o o

யாழ்ப்பாணம், மே 13

மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் இன்று முற்பகல் 10 மணிக்கு சாளரம் ஏற்பாட்டில் இலக்கிய நிகழ்ச்சி ஒன்று இடம்பெறவுள்ளது

அந்த நிகழ்ச்சியில் ''உதயத்தின் கதிர்களை உள்ளே வர விடுங்கள்'' என்ற தலைப்பில் செல்வி வே. அருந்ததி சிறப்புரையாற்றுவார் (உ-5)

## உணவு முத்திரை விநியோகம்

யாழ்ப்பாணம், மே 13

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் உலர்உணவு நிவாரண முத்திரைகளை இன்றுமுதல் தத்தமது கிராம சேவையாளர்களிடம் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலகநாயகம் போல் அறிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்தவர்கள் தற்சமயம் வைத்திருக்கும் உலர் உணவு அட்டையை கிராம சேவையாளரிடம் ஒப்படைத்து, தங்களுக்குரிய முத்திரையைப் பெற்று அதற்குரிய பொருள்களை தத்தமது சங்கங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

(உ-3)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், மே 13

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள பாடசாலைகளில் ஆய்வுகூடப் பணியாளர்கள் நூலகப் பணியாளர்கள், காவலாளர், பாடசாலைத் தொழிலாளர், சுகாதாரத் தொழிலாளர் ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையின் விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது

இத்தகவலை வடக்கு கிழக்கு மாகாணசபையின் கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் யாழ், பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கத்துக்கு அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கு மட்டுமே இந்த வசதி செய்யப்பட்டிருப்பதாகவும் — விண்ணப்பங்களை அனுப்புவோர் ''செயலாளர், கல்வி கலாசார விளையாட்டுத் துறை அமைச்சு, திருகோணமலை'' என்ற முகவரிக்கு நேரடியாக அனுப்புமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## பாராட்டு வைபவம்

யாழ்ப்பாணம், மே 13

இணுவில் மஞ்சத்தடி, அருணகிரிநாத சுவாமி கோவிலில் ''சிவத்தமிழ் வித்தகர்'' சிவ. மகாலிங்கத்துக்குப் பாராட்டு விழா நடைபெற்றது.

நேற்று இரவு இடம்பெற்ற இந்தப் பாராட்டு வைபவத்துக்கு அருட்கவி சீ. விநாசித்தம்பி தலைமை வகித்தார்.

சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவ காலத்தில் தொடர் தெய்வீகச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியமை கருதியே இப் பாராட்டு விழா நடைபெற்றது. (அ-51)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா வள்ளியம்மை

நாவலடிக்குளம் காரைநகரைப் பிறப்பிடமாகவும், தற்போது இலக்கம் 18, கின்னர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வள்ளியம்மை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற பதுளை பிரபல வர்த்தகர் கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாக்கியம், சுப்பிரமணியம் (இளைப்பாறிய அதிபர்), மனோன்மணி, ஏனாதிநாதன் (இளைப்பாறிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்), கனகசபாபதி (யாழ்ப்பாணம் ஜெயந்தா பிடவை மாளிகை உரிமையாளர்), சோதிஅம்பாள் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் சுப்பையா, யாழ்ப்பாணம் ஆறுமுகம் பிடவை மாளிகை உரிமையாளர் ஆறுமுகம், காரைநகர் முருகன் ஸ்ரோர் உரிமையாளர் தெய்வேந்திரராசா, இளைப்பாறிய விவசாய போதனா ஆசிரியர் புஷ்பலட்சுமி, காரைநகர் ஆ/தியாகராசா மத்திய மகா வித்தியாலய ஆசிரியை பூரணம், தனலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (13-5 93) வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இலக்கம் 18, கின்னர் ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சுப்பிரமணியம்

இல: 18, கின்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(25641)

திருமதி
## சிவபாக்கியம் லோகநாதன்

திருமதி சிவபாக்கியம் லோகநாதன் காலமானார்.

இவர் நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது நல்லூரில் வசித்தவரும், காலஞ்சென்ற வை. துரைச்சாமி செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், திரு. சு. லோகநாதன் (ஓய்வுபெற்ற நில அளவை அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், வைத்திய கலாநிதி திருமதி பு. கல்யாணி (பல் வைத்தியர்), திருமதி இ ரமணி (இசை ஆசிரியை - கனடா), செல்வி வாணி (லீட்ஸ் பல்கலைக்கழகம்), செல்வன் தேவராஜா (இறுதியாண்டு மாணவன், மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம், செல்வன் தேவநேசன் (3ஆம் ஆண்டு விஞ்ஞான பீடம், யாழ் பல்கலைக்கழகம்), செல்வன் தேவஅமிர்தன் (முதலாம் ஆண்டு மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்), செல்வி ஆரணி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், வைத்திய கலாநிதி கா. புஷ்பராஜன் (கொழும்பு), திரு. இளமுருகையன் (கனடா) ஆகியோரின் அருமை மாமியாரும், ஜனனி, பிரணவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திரு. தர்மலிங்கம், திரு. சாம்பசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (13-05 93) வியாழக்கிழமை காலை 8மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:
லோ. தேவராஜா (மகன்)

'கோலக்கா'
64, மருதடி வீதி,
நல்லூர்.

(25640)

## தம்பையா திருநாவுக்கரசு

உரும்பராயைச் சேர்ந்த தம்பையா திருநாவுக்கரசு (முன்னாள் பதுளை வர்த்தகர்) நேற்றுக் காலமானார்.

அன்னார் சர்வலோஜினியின் அன்புக் கணவரும், திரவியநாதன் (ஜேர்மனி), ஸ்ரீகாந்தன் (கனடா), ரவிச்சந்திரன் (ஜேர்மனி), லலிதாராணி (ஜேர்மனி), மனோகரி (கனடா), மாலினி, சாந்தினி, சசிகுமார், சுபானி ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசமூர்த்தி (ஜேர்மனி), தபேந்திரன் (கனடா), மகேந்திரராசா, கிரிதரன் ஆகியோரின் மாமனாரும்,—

காலஞ்சென்ற தங்கம்மா, சின்னம்மா, காலஞ்சென்ற தம்பிஐயா, பசுபதி, தவமணி ஆகியோரின் சகோதரரும், உஷா, சுதன், பிரதீபன், பிரியா, சாலினி, மயூரி, சர்மினா, பிரவீனா, கீர்த்தன், அமிலன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல தகனக்கிரியைகளுக்காக இன்று பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் உரும்பராய் கிழக்கு 'ஸ்ரீரங்கம்'' இல்லத்திலிருந்து உரும்பராய் இளங்காட்டு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. மகேந்திரராசா
(மருமகன்)

''ஸ்ரீரங்கம்''
உரும்பராய் கிழக்கு

(25642)

திருமதி
## ஆச்சிமுத்து இலகுப்பிள்ளை

மானிப்பாயைச் சேர்ந்த, ஆச்சிமுத்து இலகுப்பிள்ளை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இலகுப்பிள்ளையின் அன்பு மனைவியும், வாமதேவன் (முன்னாள் உதவிச் செயலாளர், பொது நிர்வாக சேவை அமைச்சு), திருமதி ஞானேஸ்வரி சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற உதவிச் சுங்கச் சேகரிப்பாளர்) அவர்களின் அன்பு மாமியாரும், ரதிதேவிசிறீஸ்கந்தராஜா, இரவீந்திரன் (லண்டன்), சிவேந்திரன் (லண்டன்), ஜானகிதேவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கார்த்திகனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-05-93) பிற்பகல் 3 மணியளவில் மானிப்பாய் ஆஸ்பத்திரி ஒழுங்கையிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
V. S. சிவபாதசுந்தரம்
(மருமகன்)

(25644)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org